Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி -29 | 15-11-2003 | சனிக்கிழமை | ஓசை 270

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.

T.P: 024-222 4247
செல்: 077-6059672

---------------சந்திரிகா–ரணில் அதிகாரப்போட்டி---------------

# அனுசரணையாளர் பாத்திரத்திலிருந்து நோர்வே தற்காலிகமாக விலக முடிவு!

## விதார் ஹெல்கேசன் அறிவிப்பு

(கொழும்பு)

**சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டி காரணமாக சமாதான நடவடிக்கையில் அனுசரணையாளர்களாக செயற்பட்டு வந்த நோர்வே அதிலிருந்து தற்காலிகமாக விலகிக் கொள்கின்றது என நோர்வேப் பிரதி வெளி விவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**



சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு சிறிலங்காவிற்கு ஏற்பட்டுள்ள அதிகார இழுபறி ஒரு முடிவுக்கு வரும்வரை தாங்கள் நோர்வேயில் இருந்து அவதானிக்கப் போவதாகத் தெரிவித்த ஹெலகேசன் அரசியல் வெற்றிடம் போர் நிறுத்த நெருக்கடிகளை ஏற்படுத்துவதில் தங்கிநிற்கின்றது எனக் குறிப்பிட்ட அவர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது நடவடிக்கையைத் தொடர்ந்தும் மேற்கொள்ளும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த மூன்று நாட்களில் சிறிலங்காப் பிரதமரை மூன்று தடவையும், சனாதிபதியை இரண்டு தடவையும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒரு தடவையும் சந்தித்துக் கலந்துரையாடியதாகக் ஹெல்கேசன் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்த உடன்பாட்டைக் கடைப்பிடிப்பதில் உறுதிப்பாட்டையும் ராணுவக் கட்

(8ஆம்பக்கம் பார்க்க...)

## தற்போதைய நிலை குறித்து ஆராய
# சனாதிபதி சந்திரிகா–ரணில் இன்று கண்டியில் சந்திப்பு?

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இன்று உத்தியோகப் பற்றற்ற சந்திப்பொன்று இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமாதான முன்னெடுப்புக்களில் இருந்து நோர்வே தற்காலிகமாக விலகியிருக்கும் சூழ்நிலையில் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகளை சந்திப்பதற்காக கண்டி செல்லவுள்ளார். இதேவேளை, தனது கட்சி விடயமாக சனாதிபதி கண்டிக்குச் செல்லவுள்ளார்.

இந்த நிலையில் உத்தியோகப் பற்றற்ற சந்திப்பொன்றை கண்டியில் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்சந்திப்பின்பொழுது தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலைமை குறித்து இருவரும் உத்தியோகப் பற்றற்ற முறையில் ஆராயலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (32)

## ஒப்பந்தம் தாமதமாகும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பி.யும் கூட்டிணைவது தொடர்பான ஒப்பந்தம் தற்போதைக்குக் கைச்சாத்திடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியான நிலையில் கட்சி மத்தியகுழுவைக்கூட்டி முடிவு செய்த பின்பே ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுமென சந்திரிகா கூறியுள்ளார்.

இதேவேளை தேர்தல் ஒன்றை நடத்தினால் தாங்கள் பெரும்பான்மை ஆசனங்களை வெல்வோம் என தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். இதனை எதிர்த்துள்ள பேரியல் அஷ்ரப் இப்போது தேர்த

(8ஆம்பக்கம் பார்க்க...)

# சமாதான முயற்சிகளை ரணிலே தொடர்ந்து முன்னெடுப்பார்

## சனாதிபதிச் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்புக்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார் என சனாதிபதி செயலகம் நேற்றுமாலை விடுதத அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கடந்த இரண்டு வருடங்களாக சமாதானத்தை முன்னெடுத்துச் சென்று பல வெற்றிகளைக் கண்டுள்ளார். இதன் அடிப்படையில் அவர் சமாதானத்தை முழுமையாக முன்கொண்டு செல்லவேண்டும் என்றும், சனாதிபதி அதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதில் எந்தவித பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க போர் நிறுத்த உடன்படிக்கை ஒரு சட்ட விரோத ஆவணம் என்று சனாதிபதி எந்த இடத்திலும் தெரிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையில்,

விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் போக்குவரத்து செய்வதற்கோ அல்லது சுதந்திரமாக செயற்படுவதற்கோ எந்தவித தடைகளும் இல்லை எனவும் அரசியல் ரீதியாக அவர்களுக்கு முழுப்பாதுகாப்பு வழங்கப்படும் அதேவேளை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு முழுமையான பாதுகாப்பும் வழங்கப்படும் என அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதான முயற்சி அல்லது யுத்தநிறுத்த உடன்படிக்கை மீதுபாதிப்பான விளைவை

(8ஆம் பக்கம் பார்க்க...)

## நாகர்கோவிலில் குடும்பஸ்தர் கைது

வடமராட்சி கிழக்கின் நாகர்கோவில் அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அத்துமீறிப் பிரவேசித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு பொதுமகன் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை, சின்னத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ஜெயதாசன் செல்வராசா (வயது-38) எனும் குடும்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## கல்வி அதிகாரிகளுக்கு படையினர் எச்சரிக்கை

(வவுனியா)

இராணுவத்தினர் வவுனியா வடக்கு கல்விப் பணிமனை அதிகாரிகள், அதிபர்களை அழைத்து நேற்றைய தினம் எச்சரிக்கை செய்துள்ளனர். கடந்த முறை வவுனியாவில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக வீடியோ ஒளி நாடா போட்டுக் காட்டப்பட்டு மாணவர்கள் அரசியல் நடவடிக்கைக்கு ஈடுபடுத்தப்படுவதை நிறுத்த வேண்டும் என்று இராணுவத்தினர் அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர். ஒளிநாடாபோட்டு அதிகாரிகள் எச்சரிக்கப்பட்ட அதேசமயம் அரசியல் நடவடிக்கைக்காக மாணவர்களைப் பயன்படுத்தப்படக் கூடாது என்றும், இவ்வாறான நிகழ்வுகள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறக் கூடாது என்றும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (21, 10)

## வரி அட்டை பெறவும்

கிளிநொச்சி, மல்லாவி, புதுக்குடியிருப்பு, ஆண்டான்குளம் ஆகிய இடங்களிலுள்ள போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் செயலகங்களில் 01.11.2003 முதல் 2004 ஆம் ஆண்டுக்கான வரியட்டை வழங்கப்படுகின்றது என்பதை ஊர்தி உரிமையாளர்களின் கவனத் திற்கு போ.வ. பிரிவினர் அறியத்தருகின்றனர்.

# சமாதான முயற்சியைப் பொறுப்பேற்க சந்திரிகாவிடம் மீண்டும் ரணில் கோரல்

## - ஆளும் கட்சி பா.உ.கள் மத்தியில் உரை

(கொழும்பு)

சமாதானத்தை அடைவதற்கு எந்தவொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் பூரண ஆதரவு தருவதாக பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத் தொகுதியில் நேற்று அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றிய போது சனாதிபதி சமாதான முயற்சியை பொறுப்பேற்றுக் கொள்வாரானால் அரசியல் வேறுபாடின்றி தாம் அதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன் என்று கூறினார். தகுந்த அதிகாரம் இல்லாமல் சமாதான முயற்சியை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வது கடினமானது என்று தான் கருதுவதாகவும் குறைபாடுகள் மத்தியில் கடந்த இரு ஆண்டுகளாக யுத்தநிறுத்தம் அமுல் செய்யப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட சாதகமான பெறுபேறுகள் பற்றியும் அவர் எடுத்துரைத்தார். இந்த உடன்படிக்கையை மேலும் தொடர்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

யானைதான் சமாதானமாக

(8ஆம்பக்கம் பார்க்க...)

## நோர்வேயைப்பின்பற்றி
# போர் நிறுத்த கண்காணிப்புக்குழு இன்று முடிவு எடுக்கலாம்

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்பில் இருந்து நோர்வே தற்காலிகமாக விலகியுள்ள நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரும் இன்று இதே நிலையை எடுக்கலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலைமை ஏற்படும் பட்சத்தில் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன என்ற நிலை தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அரசாங்கமும் சனாதிபதியும் இருவேறு பகுதியாக பிரிந்திருந் தாலும் கூட இருவரும் இணைந்து முடிவொன்றைக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# மாவீரர் நாள் நவம்பர்-27

"ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன்; ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்."

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரி விளம்பரம்

### வயற் காணி விற்பனைக்குண்டு

பரந்தன் 4ஆம் வாய்க்காலில் இரு போகமும்செய்கை பண்ணக் கூடிய 5 ஏக்கர் வயற் காணி விற்ப னைக் குண்டு. தொடர்பு: திரு. க. கனக சிங்கம் D7, கிளிநொச்சி, 74,D8, உருத்திரபுரம். (3868)


## கலந்துரையாடல்

வள்ளிபுனம் வலயத்தில் மாவீரா தினத்தை முன்னிட்டு கைவேலி, வள்ளிபுனம் கிராமங்களில் முன் னோடி கலந்துரையாடல்கள் நடை பெற்றுள்ளன.

5ஆம் நிகதி கைவேலியிலும் 8 ஆம் நிகதி வள்ளிபுனத்திலும் நடைபெற்ற இக்கலந்துரையாடல் களில் புதுக்குடியிருப்புப்பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன் கருத் துரை வழங்கினார். (19)

# கிளி. தொழில்நுட்ப நிறுவனத்தில் கணினிப் பயிற்சி நெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி தொழில்நுட்ப நிறு வனத்தில் கணினிப் பயிற்சி நெறி நேற்று ஆரம்பித்து வைக்கப் பெற் றது.

விரிவுரையாளர் ஜெயக்குமார் தலைமையில் நேற்றுப் பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் கிளி. கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு விரிவுரையாளர் மண்ட பத்தினை நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். கணினிப் பயிற்சி நிலையத்தினை கிளி. வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. சிவசாமி வைபவ ரீதியாகத் திறந்து வைத் தார்.

மேற்படி பயிற்சி நெறியில் 35இக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (சோ)

# கிளி. கூட்டுறவுச் சபையின் பணியாளர் பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் இளம் கூட்டுறவுப் பணிப்பாளர்களுக்கான பயிற்சி நெறி இன்று நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் அ. கேதீஸ்வரன் தலைமையில் இன்று காலை 9.30 முதல் பி.ப 4.00 மணி வரை கிளி. மாவட்டக் கூட்டுறவுச் சபை மண் டபத்தில் நடைபெறவுள்ள இப்பயி ற்சி நெறியில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச. மோகனபவன் பிரதம விருந்தினராகவும், கிளி. மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைக் கூட்டு றவுப் பகுதி இணைப்பாளர் க. மயூரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (சோ)

# இயற்கை முறையிலான பழமரச் செய்கைக்கு ஏற்பாடு

(ஒட்டுசுட்டான்)

இயற்கை வளத்தைப் பயன்ப டுத்தி இயற்கை முறையிலான பழமர உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக திட்டமிடப்பட்ட விவசாய நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட் டத்தில் பத்துக் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பத்துக் கிராமங் களிலும் 250 பயனாளிகளுக்கு கொடித்தோடை, பாப்பாசி விதைகள் என்பன மானியமாக வழங்கப்பட்ட துடன் இவற்றுக்கான பயிற்சி வகுப் புக்களும் நடாத்தப்பட்டுள்ளன. பயிற்சி வகுப்பின் செயற்கையான உரம் கிருமிநாசினி என்பன பாவிப் பதால் சூழல், உயிர் இனங்கள், மண்ணின் வளமாக்கிகள் மூண்புழு பக்றீரியாக்கள்அழிவது டன் மண், மண்நீர் போன்றனவும் பாதிப்படை யும். இச் செயற்பாட்டைக் குறைப்ப தற்கும் சுயமான உற்பத் தியை மேற்கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டதுடன்பழமரச் செய்கை யினால் ஏற்படும் நன்மை தீமைக ளையும்எடுத்துக் கூறப்பட்டது என பொருண்மிய மதியுரையக செய்தி குறிப்பிடுகின்றது. (05)


## சாவு அறிவித்தல்



திருமதி

### செல்வராசா செல்வமணி

பிறப்பு:- 12 . 08 . 1949

ஆண்டவர்
அரவணைப்பில்:- 14 . 11 . 2003



முல்லைத்தீவு மணற்குடியிருப்பை சொந்த முகவரியாகவும், 10-ஆம்வட்டாரம், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் புதுக்குடியிருப்பு முன்பாக தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி செல்வராசா செல்வமணி 14.11.2003 அன்று சாவடைந்தார். இவர் அந்தோனிப்பிள்ளை செல்வராசாவின் அன்பு மனைவியும் ஜெயசீலன், குணசீலன் (போராளி பாண்டியன்),பூலோக சீலன் (முல்லை ப.நோ.கூட்டுறவுச் சங்க கணக்காளர்), சகாயராணி, ஜெயசீலி, றம்சா, மரியசீலி (விக்கினேஸ்வரா பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், எலியாஸ் (மன்னார்),சாரதா(குருநகர், யாழ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கஸ்மினி, டெனிஸ்ரன், சுவேதினி, சுவேதா ஆகியோரின் அன்புப் பேத்தியும், பொ. கிறிஸ்த்தோப்பர், பொ.அருளப்பு ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னையா, எலிசபேத் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை (செல்லத்துரை) மேரி மெற்றலின் (அம்மாப்பொன்) ஆகியோரின் மருமகளுமாவார். அன்னாரின் பூதவுடல் 15.11.2003 சனிக்கிழமை பிற்பகல்3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு இரணைப்பாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:-
கணவர் செல்வராசா,
பிள்ளைகள்,
மருமக்கள்.

சிறன் சிகை அலங்கார
உரிமையாளர்,
புதுக்குடியிருப்பு. (3732)


# 500 வரையான காச நோயாளர்கள் யாழ்.இல் வைத்தியசாலை இன்றி அவதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிரந்தரமான ஒரு காச நோய் வைத்தியசாலை இன்மையால் 500இற்கும் மேற்பட்ட காச நோயாளர்கள் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

யாழ் கோப்பாய் அரசினர் வைத் தியசாலையில் மேற்படி வைத் தியசாலை இயங்கி வந்தாலும் அதற்கு அப்பகுதி மக்கள் காட்டிய எதிர்ப்பைத் தொடர்ந்து சங்கானை வைத்தியசாலைக்கும் அங்கும் எழுந்த எதிர்ப்பைத் தொடர்ந்து மந் திகை மருத்துவமனைக்கும் மேற் படி வைத்தி யபிரிவு மாற்றப்பட்டு இருப்பினும் அங்கும் இது குறித்து அதிருப்திகள் வெளியிடப்படுவதால் இந்நோயாளிகளின் நிலை பரிதாப கரமாகி வருகிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக இருந்து வந்த மயி லிட்டி காச நோய் வைத்திய சாலையும் பண்ணை மார்பு நோய் வைத்தியசாலையைப் பாதுகாப்பு வலயம் என படையினர் வைத்திருப் பதுடன் அங்கிருந்து படையினரை அகற்றி அவற்றை இயங்க வைப்ப தற்கு அரசு கவனம் எடுக்காமையே இத்தகைய சூழ்நிலைக்குக் காரணம் என குறிப்பிடப்படுகிறது. (33)

# உதயசூரியன் கிராம மக்களின் குடியேற்றத்துக்கு படையினர் தடை

(வடமராட்சி)

வெள்ளப்பாதிப்பிற்குள்ளாகியுள்ள சாவகச்சேரி உதய சூரியன் கிராம மக்களை வேறு மேட்டுநிலப் பகு திகளில் குடியமர்த்த அரச அதிகா ரிகளால் மேற்கொள்ளப்பட்ட முயற் சிகள் படைத்தரப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி உதயசூரியன் கிராமத் திலுள்ள சாவகச்சேரி நகரசபைக் குச் சொந்தமான தொழிலாளர்கள் விடுதி உட்பட சுமார் 40 இற்கும் அதிகமான குடியிருப்புக்களை படைத்தரப்பு ஆக்கிரமித்துள்ளது.

இந்நிலையில் அருகிலுள்ள வெற்றுக்காணியொன்றினுள் அப் பகுதி மக்கள் தற்காலிக கொட்ட கையை அமைத்து குடியமர்ந்துள் ளனர்.

எனினும் தொடரும் மழையினால் இக்குடியிருப்புகள் வெள்ளத்தினுள் மூழ்கிவருகின்றன. இதையடுத்து சாவகச்சேரி நகரை அண்டிய காணி களில் முகாம் அமைத்து இம்மக்க ளைக் குடியமர்த்த அதிகாரிகள் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

எனினும் சாவகச்சேரி கரை யோரப்பகுதிகளில் அமைக் கப்பட்டுள்ள பாதுகாப்பு வேலிகளை அண்டி எவரையும் புதிதாகக் குடிய மர அனுமதிக்க முடியாதென படைத்தரப்பால் அறிவிக்கப் பட்டுள்ளது. இதையடுத்து அம்மக் களை வேறு இடங்களில் குடிய மர்த்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி கள் தற் காலிகமாக கைவிடப் பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படு கின்றது. (27)

# கலை இலக்கிய சமூக பங்காளர் சங்கமம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பிரதேசத்திலுள்ள கலை, இலக்கிய, சமூகநோக் குடைய இளையவர்களை ஒன்று சேர்த்து இயக்குவதற்கான இளைய வர் கலை இலக்கிய சமூக பங்கா ளர்கள் சங்கம நிகழ்வு நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

மேற்படி சங்கம நிகழ்வு நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவை சங்க மண்ட பத்தில் நடைபெறவுள்ளதெனவும் கலை இலக்கிய சமூக நோக் குடைய இளையவர்களை மேற்படி நிகழ்விற்கு சமூகம் அளிக்கும் வண்ணம் சங்கம ஏற்பாட்டுக் குழு வினர் வேண்டியுள்ளனர். (சோ)


## மகிழ்வடைகின்றோம்

ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைச்சேர்ந்த

### திரு. நாகலிங்கம் நந்தகுமார்

அவர்கள் இலங்கை நிர்வாகசேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு மகிழ்வடைந்து வாழ்த்துகின்றோம்.



நண்பர்கள்,
ஆற்றல் குழுமம், ஸ்கந்தபுரம்.
(3874)


# நூல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனையி னால் கரைதுறைப்பற்று கோட்டத் திற்குட்பட்ட சில பாடசாலை களு க்கு பொது நூல் கொள்வனவுக் காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொது நூல்களும், போட்டோ பிரதிஇயந்திரமும், முள்ளியவளை தமிழ் வித்தியால யத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறும தியான பொது நூல்களும் வழங்கப் பட்டுள்ளது என முள்ளி யவளை தமிழ் வித்தியாலய அதிபர் சு.வீர சிங்கம்தெரிவித்துள்ளார். (ஆ)

# சுயதொழில் முயற்சிக் கடன் பெண்கள் அ.பு.நி. வழங்கல்

பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் சுயதொழில் முயற்சிக்கென கடன் வழங்கும் திட்டமொன்று நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் இன்று காலை 9.00 மணிக்கு மேற்படி நிறுவன முதன்மைச் செயலகத்தில் வைத்து உதயநகர் கிழக்கு, மேற்கு கிராமங்களைச் சேர்ந்த 26 பயனாளிகளுக்கு சுயதொழில் மேற் கொள்வதற்கென கடன் வழங்கப் படவுள்ளதென நிறுவன இணைப் பாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## கண்டெடுப்பு

நவரத்தினம் நித்தியானந்தன் தே.அ. அ. இல.832714690 V கனக ராயன்குளம், கந்தையா லோகேஸ் வரி தே.அ.அ. இல. 785842910X கண்டி, மதுரவீரன் செல்வம் தே.அ. அ. இல. 642283472X அக்கராய ந்தனகாசிலிங்கம் கஜிதா தே.அ.அ. இல. 817022693V கிளிநொச்சி, பொன்னுத்துரை சுயேந்திரன் 581691769V நயினாதீவு ஆகியோ ரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது உரித்துடையவர்கள் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். (சோ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாய்
மடியில்
24 - 12 - 1935



ஆண்டவன்
அடியில்
24 - 10 - 2002

திதி:- 15.11.2003

அமரர் உயர்திரு

### கந்தையா - பத்மநாதன்

[இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞரும்,
அரசாங்க அதிபரின் பிரத்தியேக செயலாளரும்]

விளையாட்டு பருவ மதில் விறுபங்கள் செய்தாலும்
விருப்புடனே அன்மித்து வித்தை பல கற்பித்து
விஞ்சியதோர் செல்வங்களாய் மேதினியில் வாழ வைத்து
விந்தையதாய் எம் சிறப்பெல்லாம் கண்ணாரக்கண்டு களித்தீரே.

ஆங்கிலத்தில் அறிவுடையோர்க்கு ஆசானாய்
கடமைதனை கருத்துடனே எடுத்தாலும் உம் சேவை
இடர் கொண்ட மாந்தர்களின் துயர் தீர்க்க -- உன்
உன்னத கரங்கள் வரைகின்ற வரைவுகளை
அரசாங்க திணைக்களங்கள் சடுதியிலே மறந்திடுமா?
உன் வரைவு சென்ற இடம் மறுக்காது கீர்த்தி பெறும்
உன் வரிகள் காணாது கனக்குதையா காகிதங்கள்
தாளாத உம் பிரிவால் தளம்புதையா எம் மனங்கள்
தேடுகின்றோம் அப்பா புன்னகைக்கும் உன் வதனம்
வாடுகின்றோம் விழிகள் நீர்சொரிய உம் நினைவில் .

முகவரி:-
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.
(3875)

குடும்பத்தினர்.

# ஈராக் மக்களிடம் ஆட்சியை ஒப்படைக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த உத்தரவு

## அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் விடுத்தார்

(வாஷிங்டன்)

**ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை வாஷிங்டனை பதற்றத்திற்கு தள்ளியுள்ளது. இதனால் ஈராக்கின் ஆட்சியை அந்நாட்டு மக்களிடமே ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஈராக்கிய இடைக்கால ஆட்சியாளர் போல் பிரிமரிடம் அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.**

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் போல் பிரிமரும் இரு நாட்கள் பேச்சுக்கள் நடத்தியபின்னரே துரித நடவடிக்கைக்கான உத்தரவை போல் பிரதமருக்கு புஷ் வழங்கியுள்ளார்.

தற்போதைய நிலையில் ஈராக்கியர்களிடம் ஈராக் ஆட்சியை கையளிப்பதற்கான வழிமுறைகளை ஆராய்வது முக்கியமான நிலைப்பாடு என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிஸா றைஸ் கூறியுள்ளார்.

இதேவேளை ஈராக்கில் இவ்வாறான அரசியல் மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான கால எல்லையை நிர்ணயிப்பதற்கு டிசம்பர் 15ஆம் திகதி வரை ஐ.நா. சபை அமெரிக்காவுக்கு காலக்கெடு வழங்கியுள்ளது.

அத்துடன் ஈராக்கியர்களிடம் ஈராக் ஆட்சியை வழங்குவதே போரினால் பாதிப்படைந்துள்ள அந்நாட்டு மக்களுக்கு நன்மையளிப்பதாக அமையும் என ஐ.நா. சபையின் பிரதான பேச்சாளர் பிரெட் கடந்த புதன்கிழமை செய்தியாளர் மாநாட்டில் கூறியிருந்தார்.

இதனால் ஈராக்கியர்களிடம் ஈராக்கை ஒப்படைக்கும் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள போல் பிறிமர் ஈராக்கிற்கு மீண்டும் திரும்பி ஈராக்கிய ஆட்சிச்சபையின் உறுப்பினர்களுடன் இது பற்றி பேச்சுக் களை நடத்தவுள்ளன.

இதேவேளை வியட்னாம் யுத்தத்தின் ஆரம்பகாலப்பகுதியில் உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கையைவிட ஈராக் மீதான ஆக்கிரமிப்பிற்கு பின்னர் உயிரிழந்த படைவீரர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பமைச்சு வெளியிட்ட தரவுகளை ஒப்பிடும் போது இவ் விடயம் தெரியவருகிறது. வியட்னாம் யுத்தம் 1961 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பமாகியது 1962ஆம்ஆண்டு தொடக்கம் 1964ஆம் ஆண்டுவரை 392அமெரிக்கவீரர்கள் இவ் யுத்தத்தில் உயிரிழந்தனர். இதுவரை ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை 397ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈராக்கின் இறைமையை அந்நாட்டின் இடைக்கால அரசிடம் ஒப்படைத்தபின்னர், புனர்வாழ்வுப் பணிகளை நிறுவமுடியுமென பிரான்ஸ் கூறியுள்ளது.

ஈராக் தொடர்பாக நிர்வாகத்தை நிலைநாட்டுவதற்கு முன்னர் எத்தனை உயிரிழப்புக்களை சந்திக்க வேண்டியுள்ளதோ என பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் மீண்டும் ஆதங்கத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

# இந்திய-சீனா கூட்டு இராணுவ ஒத்திகை

(பீஜிங்)

சீனாவும்-இந்தியாவும் முதற்தடைவையாக கூட்டு இராணுவ ஒத்திகையை ஆரம்பித்துள்ளன.

கிழக்கு சீனக் கடற்பரப்பில் இவ் ஒத்திகை இடம்பெற்றுள்ளதாக பீஜிங்கில் உள்ள இந்தியத் தூதரக உயர் அதிகாரி ஒருவர் ஊர்ஜிதம் செய்துள்ளார். இதற்கு முன்னர் சீனாவும், பாகிஸ்தானும் இதே போன்ற ஒத்திகை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் வெடிமருந்துநிரப்பப்பட்டவாகனத்தால் மோதி தாக்குதல் நடத்தப்பட்ட இத்தாலிய பொலிசாரின் தலைமையகம்.

# ஈராக்கில் இத்தாலிய பொலிசாரின் தலைமையகம் குண்டுவெடிப்பில் பலத்த சேதம்

## 27 இத்தாலிய பொலிசார் பலி

ஈராக்கின் தென்நகரான நஸிரியாவில் கடந்த புதன் கிழமை நடத்தப்பட்ட வாகனக் குண்டுத் தாக்குதலில் இத்தாலியப் பொலிசார் 27பேர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

அதே வேளை இத்தாக்குதலில் 08 ஈராக்கியர்கள் உயிரிழந்துள்ளதாக கட்டாரைத் தளமாகக் கொண்டு இயங்கும் அல்ஜெஸீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. ஈராக்கில் சதாவின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னர் இத்தாலியப் படையினர் தாக்குதலுக்கு இலக்காகியமை இதுவே முதற்தடவையாகும்.

இத்தாலியப் பொலிசார் தங்கியிருந்த வளாகத்தின் முன்வாயிலில் ஊடறுத்து நுழைந்தகுண்டு பொருத்தப்பட்ட வாகனம் அங்கிருந்து தலைமையக் கட்டடத்தை மோதி வெடித்துள்ளது. இதனால் அங்கிருந்த கட்டடங்கள்பலசேதமடைந்துள்ளன. ஈராக்கின் புனரமைப்புபணிகளுக்கென இத்தாலி 2300 படையினரை அங்கு அனுப்பியுள்ளது. அவர்களில் 340 பேர் நஸிரியாவில் தளம் அமைத்தமை குறிப்பிடத்தக்கது.



பாதுகாப்புவேலி அமைக்கும் இஸ்ரேலின் நடவடிக்கையை எதிர்த்து பலஸ்தீனர் ஆர்ப்பாட்டம் நடத்தும் போது இஸ்ரேலியப்படையினர் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வெடிக்க வைக்கின்றனர்.

# 20 தீவிரவாதிகளை ஒப்படைக்கக் கோருவதை இந்தியா கைவிட வேண்டும்

## -பாக். அமைச்சர் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

"பாகிஸ்தான் 20 தீவிர வாதிகளை ஒப்படைக்க வேண்டும்" என்று கேட்பதை இந்தியா கைவிட வேண்டும் என்று பாகிஸ்தான் கூறியுள்ளது.

இதனைப் பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் சேக்ரசீத் அகமது டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இந்திய பாகிஸ்தான் இடையே காஷ்மீர் உட்பட அனைத்து விவகாரங்கள் குறித்தும் பேச்சுவார்த்தை தொடங்க உதவி செய்ய வேண்டும் என அமெரிக்காவை மீண்டும் ஒரு தடவை கேட்டிருப்பதாகக் கூறிய அவர்.

பாகிஸ்தானில் உள்ள 20 தீவிர வாதிகளை ஒப்படைக்க வேண்டும் என இந்தியா பட்டியல் கொடுத்துள்ளது. இது பற்றிப் பேசுவதை நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் 1949ஆம் ஆண்டு கராச்சி சதி வழக்கில் இந்தியாவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட தலைவர்களின் பெயர் உள்ள பட்டியலை வெளியிட வேண்டியிருக்கும் என்று கூறியுள்ளார்.

இதன் போது நிருபர்கள் குறுக்கிட்டு நீங்கள் துணைப் பிரதமர் அத்வானியை குறிப்பிடுகிறீர்களா? என்று கேட்ட போது, பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்பு மட்டும் கொடுத்தால் போதும் எனக் கூறியுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி டில்லியில் சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாடு ஆரம்பமானது. இதில் கலந்து கொள்வதற்கே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இந்தியா வந்துள்ளார்.

# அவுஸ்திரேலியாவின் செயலுக்கு ஐ.நா.சபை கண்டனம்

(லண்டன்)

அவுஸ்திரேலியாவிற்குச் சென்ற குர்திஸ் அகதிகளை இந்தோனேசியாவிற்குத் திருப்பி அனுப்பியதை ஐ.நா. சபையின் அகதிகளுக்கான நடவடிக்கைக் குழு கண்டித்துள்ளது. இந்தோனேசிய மீன்பிடிப் படகொன்றில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற 14 துருக்கிய குர்திஸ் அகதிகளை அவுஸ் திரேலியா இந்தோனேசியாவிற்கு திருப்பியனுப்பியதன் மூலம் அவுஸ்திரேலியா தான் விரும்பாத அகதிகளை திருப்பி அனுப்பும் கழிவுப் பொருட்களின் இடமாக இந்தோனேசியாவை கருதுவதாக ஐநா.சபையின் அகதிகளுக்கான நடவடிக்கைக் குழு கண்டித்துள்ளது.



ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம்.

# வடகொரிய அணுவாயுத திட்டம் குறித்து 2ஆம் கட்ட பேச்சு அடுத்தமாதம் சீனாவில் நடைபெறும்

வடகொரியாவின் அணுவாயுத திட்டங்கள் தொடர்பாக இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தையை பீஜிங்கில் டிசம்பர் 10ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை நடத்துவதற்கு அமெரிக்காவும் வடகொரியாவும் இணங்கியுள்ளன.

இதனை ஜப்பான் நாளிதழ் கூறுகின்றது. கடந்த ஆகஸ்டில் வடகொரியா அணுவாயுதத் திட்டம் குறித்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை பீஜிங்கில் நடைபெற்றது. இதில் வடகொரியா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா, தென்கொரியா, யப்பான், ஆகிய நாடுகளும் பங்கு பற்றி ஆறு தரப்பு பேச்சு வார்த்தையாக அது அமைந்திருந்தது.

இந்தப்பேச்சுக்களில் வடகொரியா சிக்கலை தீர்ப்பது தொடர்பாக எந்த இணக்கப்பாட்டையும் எட்ட முடியவில்லை. ஆயினும் மீண்டும் கூடுவது எனும் உறுதியுடன் பேச்சு வார்த்தை முடிவுக்கு வந்தது.


இந்நிலையில் மீண்டும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது குறித்து வடகொரியாத் தரப்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந் தன.

இந் நிலையில் மீண்டும் டிசம்பரில் பேச்சுக்கு பங்கு பற்ற வடகொரியாவும், அமெரிக்காவும் இணங்கியுள்ளன. இதுவும் ஆறு தரப்பு பேச்சுவார்த்தையாக அமையவுள்ளது. இதற்கான இணக்கத்தை ஏனைய நாடுகளிடம் பெறுவதற்கான முயற்சியில் சீன ராஜதந்திரிகள் ஈடுபட்டுள்ளதாகவும் ஜப்பானிய நாளிதழ் கூறுகின்றது.



மெக்ஸிகோ மிருகக்காட்சிச்சாலையில் பிறந்து ஆறு நாளான தனது குட்டியுடன் நிற்கும் நீர்யானை.

# சூரிய மண்டலத்தில் 26 வருடங்கள் ஆய்வு நடத்திய வோயேஜர்-1 பூமிக்குத் திரும்புகிறது



1977 ஆம் ஆண்டில் பூமியில் இருந்து கிளம்பிய வோயேஜர்-1 விண்கலம் தற்போது சூரிய மண்டலத்தில் ஆய்வுகளை முடித்துவிட்டு 26 வருடங்களின் பின் புவிக்குத் திரும்புகின்றது. இது புவியிலிருந்து பாரிய தொலைவுக்கு அப்பால் மனிதனால் அனுப்பப்பட்ட விண்கலமாகும். வோயேஜர்-1 சூரியனின் இறுதிப் பகுதியைக் கடந்து சென்றுள்ளது. அதாவது சுமார் 8.4 பில்லியன் மைல்கள் (13.5 பில்லியன் கி.மீ)

வானவியலாளர்கள் நம்பும் வகையில் சூரிய வெப்பம் கூடிய இறுதி அந்தம் எனப்படும் பிரதேசம் சூரியனின் தாக்கம் மிகக் கூடிய பகுதியாகும்.

சூரிய மண்டலத்திலிருந்து பிரிந்து செல்லும் கோள் துகள்கள் இப்பகுதியில் அதிக வெப்பமடைகின்றன. அத்துடன் அதன் வேகம் குறைகின்றது. தற்போது இப்பகுதிக்குள் பிரவேசித்துள்ள வோயேஜர்-1 இன் மூலம் பல தகவல்கள் புவிக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கலம் சூரிய மண்டலத்துக்கு அப்பால் பிரவேசித்திருப்பது ஆய்வுகளில் இது வரை கிட்டாத ஒரு வெற்றியாகும். இதன் பின்பு எதிர்காலத்தில் இவ்வாறானதொரு கலத்தை அனுப்பி ஆய்வுகளை மேற்கொள்ள முடியுமா என்பது சந்தேகமே.

1977 ஆம் ஆண்டு இக்கலம் தனித்து அனுப்பப்படவில்லை. உதவிக்காக வோயேஜர்-2 எனும் உதவிக் கலம் ஒன்றும் இதனுடன் அனுப்பப்பட்டது. அன்றிலிருந்து படிப்படியாகத் தூரத்துக்குச் சென்ற வோயேஜர் -1 சூரிய மண்டல எல்லையை இனம் கண்டு 1998 இல் வியாழனில் ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்பட்ட பயனியர்-1 விண்கலத்தைக் கடக்க முடிந்தது. இப்போது 26 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள வோயேஜர்-1,வோயேஜர்-2 ஐ கடந்து சென்றுள்ளது.

இவ்விரு விண்கலங்களிலிருந்து பல்வேறு தகவல் புவிக்கு எட்டியுள்ளன. விசேடமாக சனி,வியாழன் ஆகிய கிரகங்கள் பற்றிய பல தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் வோயேஜர்-2 விண்கலம் எமக்கு மிகத் தொலைவிலுள்ள யுரேனஸ், நெப்ரியூன் கோள்களுக்கு மிக அண்மையில் பயணம் செய்வதாகத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

சூரிய மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களினால் அதன் சூழலுக்கு ஏற்படும் விளைவுகள் பற்றியும் இரு கலங்களும் தகவல்களைத் தந்த வண்ணமுள்ளன. வாஷிங்டனிலுள்ள வாயு மண்டல விண்வெளி ஆய்வு மண்டல நிறுவனமான "ஸ்மித் சோனியன் நூதனசாலை" வோயேஜரிலிருந்து கிடைக்கும் தகவல்களை வெளியிடும் மாநாடு ஒன்றை அண்மையில் நடத்தியிருக்கின்றது. அதன்படி எதிர்காலத்தில் சூரியனுக்கு மிகவும் அண்மையில் மிகமிக வெப்பம் கூடிய ஹெலியோபஸ் பிரதேசத்துக்குள் சென்று ஆய்வுகள் மேற்கொள்ள முடியும் என்பது தெரியவந்துள்ளது.

# கைக்குட்டை சதுரமான கதை

அரசர்கள் முழு அதிகாரம் பெற்றிருந்த போது அவர்கள் பல வேடிக்கையான ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்கள். அவற்றில் ஒன்று 1785 ஆம் ஆண்டு பிரெஞ் மன்னன் 16 ஆம் லூயி பிறப்பித்த ஆணையாகும்.

அதன்படி பிரெஞ் குடிமக்கள் அனைவரும் தங்களது கைக்குட்டைகளைச் சதுர வடிவில்தான் வைத்திருக்க வேண்டும். அதுவே பழக்கமாகி அந்த நாகரிகம் உலகம் முழுவதும் பரவி இப்பொழுது நாம் அனைவரும் கைக்குட்டைகளைச் சதுரவடிவில் மட்டுமே வைத்துக் கொள்கிறோம். வட்டமாகவோ அல்லது முக்கோணமாகவோ அல்லது வேறு வடிவங்களில் கைக்குட்டையை வைத்திருப்பதில்லை.

# மனநோயாளருக்கு உதவும் வகையில் புதியரக மெத்தை தயாரிப்பு

வருங்காலத்தில் உலகில் சனத்தொகை அதிகரித்து வருவதால், கடும் சிக்கல்களுக்கு மனித சமூகம் முகம் கொடுப்பது தவிர்க்க முடியாது. ஆனபடியால் தங்களின் வேலைகளை செய்து கொள்வதற்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் விஞ்ஞானிகளால் **"pressure Pads"** அழுத்தம் கொடுக்கும் மெத்தை தயாரிக்கப்பட்டுள்ளது.

"எல்மயிசர்" போன்ற மன நோயினால் பீடிக்கப் பட்டவர்களுக்கு இந்த மெத்தை மிகவும் பிரயோசனமாக உள்ளதென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். குறிப்பிட்ட நபரிற்குள்ள மனநிலையிலிருந்து மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால், கட்டில் மெத்தையில் பொருத்தப்பட்டிருக்கும் தொலைபேசி அவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கும். அதன்படி மனநோயாளர்கள் செயல்படுவார்கள்.

# சிறந்த மூலிகைகள்

உலகெங்கிலுமுள்ள அதிக கிராக்கியுள்ள பத்துவகையான மருந்து மூலிகைச் செடிகளில் இரண்டு செடிகள் இலங்கையில் கிடைக்கின்றன.

கொறக்கா மற்றும் வல்லாரை ஆகியனவே அந்த இரு மருந்து மூலிகைச் செடிகளுமாகும். சுதேச மருத்துவத்துறை நிபுணர் ஐனிஸ்ர எஸ். பெரேரா இதைக் கூறியுள்ளார்.

உடலில் கொலஸ்ரோலைக் குறைப்பதற்கு கொறக்கா புளியில் காணப்படும் சிற்றிக் அமிலம் உதவுகிறது. என்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

# மேசை மீது வைத்துப் பாவிக்கக் கூடிய காலநிலையைக் கண்டறியும் கருவி



மேசை மீது வைக்கக் கூடிய அல்லது சுவரில் தூக்கி விடக் கூடிய கால நிலை பற்றி அறிவிக்கும் மணிக்கூடு வடிவிலான கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறிய வளிமண்டல ஆய்வு நிலையமாகக் கருதப்படும் இக்கருவி வழங்கும் தகவல்களில் அப்பிரதேசத்தில் அன்று நிலவும் கால நிலை பற்றியும் அயற் பிரதேசங்களின் காலநிலை பற்றியும் அறிய முடியும். தற்போது ஐக்கிய அமெரிக்காவில் அறிமுகமாகியுள்ள இச்சிறு வானிலை மையம் அந்நாட்டின் வளிமண்டல ஆய்வு நிறுவனத்திற்கு சமனானதாகும்.இதன் இன்னுமொரு சிறப்பம்சமானது என்னவென்றால் இருபது செக்கன்களுக்கு ஒரு முறை சமிஞ்ஞை ஒலி எழுப்பும். இது 4அங்குல நீளமும் 6 அங்குல உயரமும் உடைய திரை ஒன்றையும் கொண்டுள்ளது.

இதை AA ரக மின்கலம்(பற்றறி) இரு சோடிகள் மூலம் இயக்க முடியும் ஒரு சோடி திரைப்பகுதிக்கும் மற்றச்சோடி மணிக்கூட்டுப் பகுதிக்கும் இணைக்கப்பட வேண்டும்.

## தெரிந்துகொள்ள

* உலகின் முதல் தேசியக் கொடி உருவாக்கப்பட்டது டென்மார்க்கில் தான். 1319 இல் இந்தத் தேசியக் கொடி வடிவமைக்கப்பட்டது. கொடியில் சிவப்புப் பின்னணியோடு வெள்ளை நிறச் சிலுவை காணப்பட்டது.
* ஆபிரிக்க மக்கள் வறுமை காரணமாக சோளத்தைத்தான் அதிகம் உண்ணுகின்றார்கள். ஜப்பானியர் கூளோ செல்வச் செழிப்பால் கேக் அதிகம் உண்கிறார்கள்.
* தென் அமெரிக்கா மத்திய அமெரிக்க நாடுகளில் ஒருவகைத் தவளைகள் வாழ்கின்றன. இவற்றைக் கண்டால் பாம்புகள் ஓடுகின்றன. விஷம் கொண்ட இந்தத் தவளைகளைப் பாம்புகள் கடித்தால் உடனே மரணம் தான்.
* பிலிப்பைன்ஸ் நாட்டில் 7107 தீவுகள் உள்ளன. இவை முழுவதும் மழைக்காடுகளால் ஆனவை. இந்தத் தீவுகளில் மிகப் பெரியது லுசோன்.
* புருணையில் முழுக்க முழுக்கத் தங்கத்தினால் கட்டப்பட்ட அரண்மனை காணப்படுகின்றது.
* தெற்கு ஆசியாவில் நான்கு பேரில் ஒருவர் வீதம் பசியால் வாடுகிறார்கள். சீனாவில் 11 கோடி மக்கள் பசியால் வாடுகிறார்கள். இந்தியாவில் 11 கோடியே 30 இலட்சம் மக்கள் பசியால் வாடுகின்றார்கள்.

## வாழைப்பழம்

வாழைப்பழத்தில் குளுக்கோஸ் அதிகமுண்டு. இது எமது உடலுக்குத் தேவையான இனிப்புச் சத்தை வழங்குகின்றது.

வாழைப்பழத் தோலை நோய்க் கிருமிகள் ஊடுருவ முடியாது என அண்மையில் அறிவியல் வல்லுநர்கள் கண்டுள்ளார்கள்.

# வெளிச்சம் தரும் கைக்கடிகாரம்



இது வரை நாம் கைக் கடிகாரங்களினால் நேரம் மட்டும் பார்த்தோம்.தற்பொழுது கைக் கடிகாரங்களின் தேவைகள் விஞ்ஞான ரீதியில் மனிதர்களுக்கு மேலும் நன்மைகள் கொடுப்பதை விஞ்ஞானிகள் உணர்ந்து கொண்டதன் விளைவாக மெழுகுவர்த்தி வெளிச்சத்தைப் பார்க்கிலும் அதிக வெளிச்சத்தை கொடுக்கும் கைக் கடிகாரத்தை "சுவிர்சலாந்து விக்டோநொக்ஸ்" இராணுவத்திற்கு ஆயுதம் தயாரிக்கும் நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

இக்கடிகாரத்தில் LED வெளிச்சத்தினால் இருளான இடங்களில் செல்ல முடியும். இந்தக் கடிகாரம் இருளில் நடக்கும் பொழுது வெளிச்சம் ஏற்படுத்துவதற்கு வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளது. வெளிச்சம் வரும்பொழுது நேரத்தையும் அதில் பார்க்க முடியும். இதனால் எந்தச் சிக்கலும் ஏற்படாது.


# இயந்திர மனித..னின் பிறந்தநாள் கொண்டாட்டம்




" அசிமோ " என்ற இயந்திர மனிதனுக்கு மூன்றாவது பிறந்த நாள் கொண்டாடப்படுகிறது.

யப்பானின் "கொண்டா" நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர மனிதனின் பிறந்த நாள் கொண்டாட்டம் பாங்கொங்கில் "கொண்டா" நிறுவனத் தலைமையகத்தில் இடம் பெற்றது. இதில் கேக் வெட்டும் வைபவமும் இடம் பெற்றது.

# மின்சக்தியில் இயங்கும் மோட்டார் சைக்கிள்



எரிபொருளின்றிக் குறைந்த செலவில் உபயோகிக்கக் கூடிய சிற்றி பைக் எனப்படும் ஹஉருபூட் இன மோட்டார் சைக்கிள் ஒன்றை ஜப்பானிலுள்ள பிரபல நிறுவனமொன்று அண்மையில் அறிமுகம் செய்துள்ளது.

முழுவதும் மின் சக்தியினால் இயக்கப்படும் இவ்வகை மோட்டார் சைக்கிள் அதற்குள் இணைக்கப் பட்டுள்ள மின் கலங்களை மின்னேற்றுவதன் மூலம் பிரயாணம் செய்ய முடியும். ஒரு முறை முன்னேற்றப்பட்டு 20 கிலோமீற்றர் தூரம் செல்ல முடியும். இது நகர பாவனைக்கு மட்டுமே பொருத்தமானதால் சிற்றிபைக் எனப்படுகிறது.

# மாணவ விண்வெளி விஞ்ஞானி

செவ்வாய்க்கிரகம் தொடர்பாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா நடத்தும் ஆய்வுப் பணிகளில் பங்கேற்கப் புதுடில்லியைச் சேர்ந்த சாத்விக் அகர்லால் (14) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

"மாணவ விண்வெளி விஞ்ஞானி" என அழைக்கப்படும் சாத்விக் தெற்கு டில்லியில் ஒரு பள்ளியில் 10 ஆம் வகுப்பில் கல்வி கற்பவர்.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 16 பேர் இவ்விதம் தேர்வு பெற்றுள்ளனர். அமெரிக்காவிலுள்ள கிரக ஆய்வு அமைப்பு இந்தப் போட்டியை நடத்தியது. கலிபோர்னியாவிலுள்ள நாசாவின் ஜெட் இயக்க ஆய்வு மையத்தில் சாத்விக் இரண்டுவாரப் பயிற்சி பெறுவார். பின்னர் நாசா ஆய்வு மைய விண்வெளி வீரர்களுடன் இணைந்து அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் பணியாற்றுவார்.


# கூட்டமைப்பினர் மீதான தாக்குதல் வழக்கை மேல்நீதிமன்றிற்குப் பாரப்படுத்த உத்தரவு

(யாழ்ப்பாணம்)
நாரந்தனை கொலை வழக்கினை மேல் நீதிமன்றில் பாரப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை யாழ்.நீதிமன்றம் மேற்கொண்டுள்ளது.
கடந்த பொதுத் தேர்தல் காலப்பகுதியில் அரசியல் பிரச்சார நடவடிக்கைகளுக்காகத் தீவகம் சென்றுகொண்டிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பி.யினர் நாரந்தனைப் பகுதியில் வைத்து நடத்திய தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்திருந்தனர். இச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த புதன் கிழமை யாழ்.நீதிமன்றத்தில் நீதவான் இ.த.விக்னராஜாவால் நடத்தப்பட்டது. விசாரணைகளின் போது கிடைக்கப்பெற்ற சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கின் நிராயுதபாணியாகச் சென்ற கூட்டமைப்பின் மீது துப்பாக்கி, வாள் போன்ற ஆயுதங்கள் கொண்டு ஈ.பி.டி.பி.யினரால் நடத்தப்பட்ட இத்தாக்குதலும் அதன் விளைவுகளும் நாட்டின் ஜனநாயக உரிமைகளுக்கே சாவுமணி அடிப்பது போல் உள்ளதுடன்
எதிராளிகளின் வாக்குமூலங்களில் முரண்பாட்டுத் தன்மை காணப்படுவதாலும் இது சம்பந்தமான விசாரணை நடத்தவும் தகுந்த நடவடிக்கை எடுக்கவும் மேல் நீதிமன்றமே தகுதியானவை எனத் தெரிவித்த நீதவான் இவ் வழக்கு விசாரணைகளை மேல் நீதிமன்றில் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டார். (33)

# எஸ்.பி.திஸநாயக்கவின் குற்றச்சாட்டிற்கு மறுப்பு

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக் குப் பணம் கொடுத்து அவர் களை பொதுசன முன்னணியின் பக்கம் கொண்டு வர முயற்சித்த குற்றச்சாட்டை முன்னாள் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மறுத்துள்ளார். மேர்வின் சில்வா ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 600 லட்சம் முதல் 700 லட்சம் வரை கொடுத்து அவர்களை சனாதிபதி யின் தேசிய அரசாங்கத் திட்டத் திற்கு ஆதரவளிக்கக் கோரினார் என அமைச்சர் எஸ்.பி. திஸநா யக்க குற்றம் சுமத்தியுள்ளார். இதற்குப் பதிலளித்துள்ள மேர்வின் சில்வா, தமக்கு அவ்வாறான அவசியம் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (32)

# கிளிநொச்சி நகரப் பகுதியில் சுகாதார நடவடிக்கை



கிளிநொச்சி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர், பிரதேச செயலர் பிரிவினர், கிளி.மாவட்டத்தின் தமிழீழ சுகாதார சேவையினர் ஆகியோர் இணைந்து சுகாதார நடவடிக் கையினை மேற்கொண்டனர். அதன் போது உணவகங்கள், சந்தைப்பகுதி மற்றும் வர்த்தகம் சம்பந்தமான இடங்களும், சுகாதார சீர்கேடாக இருந்த இடங்களும் ஆய்வு செய்யப்பட்டது.அதன்போது சுகாதார சீர்கேடாக இருந்த நிலையங்களில் உள்ளவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்துக்களும் வழங்கப்பட்டன.பழுதடைந்த உணவுப் பொருட்கள், மழைக்கால மாகையால் நீர்தேங்கி நுளம்புகள் பெருக வாய்ப்பாக இருக்கக் கூடிய வெற்றுத் தகர டப்பாக்கள், ரயர்கள், பொலத்தின் போன்ற பொருட்கள் சேகரிக்கப்பட்டு புதைக்கப்படவுள்ளன. எனவே எதிர் நோக்கும் மழைக்காலத்தில் தொற்று நோய்களில் இருந்தும், மலேரியா, டெங்கு போன்ற நோய்களில் இருந்தும் பாதுகாக்க ஒவ்வொருவரும் சுகாதாரமாக உங்களையும், உங்களைச்சூழவுள்ள இடங்களையும் வைத்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினரால் வேண்டப் படுகின்றனர்.

# வழங்கப்பட்ட இலக்கங்களின்படி பதிவை மேற்கொள்க

## - கிளி.அரச அதிபர் கோரிக்கை

(அலுவலக செய்தியாளர்)
பதிவுகள் மேற்கொள்ளப்பெறாத உந்துருளி(மோட்டார் சைக்கிள்)களுக்கான பதிவுகள் கடந்த 5ஆம் திகதி முதல் கிளி நொச்சி மாவட்ட செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
அதன் பொருட்டு பதிவுகளை மேற்கொள்ளும் வகையில் உந்துருளி உரிமையாளர்களுக்கு அரச செயலகத்தினால் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 17 ஆம் திகதியன்று 626முதல் 800 வரையிலான இலக்கங்களுக்கும் 18ஆம் திகதியன்று 801 முதல் 900 வரையிலான இலக்கங்களுக்கும், 19ஆம் திகதியன்று 901முதல் 1000 வரையிலான இலக்கங்களுக்கும் பதிவுகள் மேற்கொள்ளப் பெறுமெனவும் 1001ற்கு மேற்பட்ட இலக்கங்களுக்கான பதிவுகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென கிளி.அரச அதிபர் தி.இராச நாயகம் தெரிவித்துள்ளார். (சோ)

# ஐக்கிய தேசியக்கட்சி வடிவமைத்த அரசியல் யாப்பு அக்கட்சிக்கே ஆப்பு வைத்துவிட்டது

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர்

இலங்கையின் அரசியல் நடைமுறையில் வளப்படுத்த வேண்டிய காலம் உருவாகிவிட்டதென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.
கடந்து சென்ற ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானவை நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலைமையைப் புரிந்து கொண்டு தேசிய விடுதலைக்காக போராட வேண்டுமென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா கூறியுள்ளார். கார்த்திகை வீரர்கள் நினைவுதினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய போது தெரிவித்துள்ளார்.
அத்துடன் சமீபத்தில் சனாதிபதி மேற்கொண்ட தீர்மானங்கள் பலனளிக்க வேண்டுமானால் மக்களுடன் பின்னிப் பிணைந்ததாக அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டுமெனவும் நாட்டின் எதிர்காலத்திற்காக சரியான தலைமைத்துவம் அவசியம் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். தேசப்பற்று மிக்க அரசாங்கம் ஒன்றின் தலைமை பதவிக்காக உயிர்த்தியாகம் செய்யவும் தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.
நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வன்மை ஜே.வி.பிக்கு இருப்பதாகவும் அதனை மக்கள் அறிந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். ஐதேக கட்சி வடிவமைத்த அரசியல் யாப்பு அக்கட்சியின் நலனுக்கே ஆப்பு வைத்திருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# கச்சாயில் முன்னரங்க நிலைகளை பலப்படுத்தும் படையினர்

(யாழ்ப்பாணம்)
கச்சாய் பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைகளை பலப்படுத்தும் முயற்சியில் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.
அண்மையில் இப்பகுதி மக்கள் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் தமது சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கு மாறும் தமது மீள் குடியமர்வுக்கான அனுமதி இழுத்தடிப்பு செய்யப்படுமானால் வெகுஜன போராட்டங்கள் தொடரும் எனவும் எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த சில நாட்களாக இப்பகுதி முன்னரங்களை பலப்படுத்தி படையினர் காவல்க் கடமையிலும் ஈடுபடுவதுடன் முட்கம்பி வேலிகளும் மின் பாய விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33)

# -கர்நாடக சங்கீத பாடத்தில்- அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவி கௌரவிப்பு

2003 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பாடவிதானத்தில் கர்நாடக சங்கீத பாடத்தில் அகில இலங்கை ரீதியில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மாணவி செல்வி மகேந்திரம் மகிதாசினியை முல்லை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் கௌரவித்துள்ளனர்.
கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை முல்லை மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி தலைமையில் இக்கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் சிறப்புரையினை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் வழங்கினார்.

# தென்னைகளைத் தறிக்கும் படையினருக்கு எதிராக முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
கொடிகாமம் அல்லாரைப் பகுதியில் உள்ள தனியார் காணிகளை ஆக்கிரமித்து அவற்றில் முகாம் அமைத்து தங்கியுள்ள படையினர் அக் காணிகளுள் காணப்படும் தென்னங்கன்றுகளில் இருந்து தேங்காய்களைப் பறித்து தமது தேவைக்குப் பயன்படுத்துவதோடு தென்னைகளையும் தறித்து வருவதாக அக்காணிகளின் உரிமையாளர்களால் குற்றம் சாட்டப்படுகிறது.
1995ஆம் ஆண்டில் இருந்து இங்கு தங்கியுள்ள படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் கூட அதனை ஒப்படைக்காது இருப்பதனால் சுமார் 30 வரையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைச் சுட்டிக்காட்டி தென்மராட்சி படைத்தலைமையகம், யாழ் மாவட்ட படைத்தலைமையகங்கள் என்பவற்றிற்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டும் எந்த வித பதிலும் தமக்குக் கிடைக்க வில்லை என அவற்றின் உரிமையாளர்கள் மேலும் கவலை தெரிவித்துள்ளனர்.

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் படையினர் போர்ப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவுக் கடற்பரப்பில் படையினர் கடந்த சில நாட்களாகக் கடுமையான போர்ப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.
இரவு வேளைகளில் ஏராளமான கடற்படைப் படகுகள் இணைந்து நடத்தும் இப் பயிற்சி நடவடிக்கையில் அப்பகுதி இரவு நேரத்தில் பெரும் பரபரப்பில் மூழ்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அஞ்சுகின்றனர்.

# தென்னஞ்செய்கை பயனாளிகளுக்கு மானியம்

தென்னை அபிவிருத்தி சபையின் அனுசரணையுடன் தென்னை மரச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாகத் தென்னங்கன்று வழங்கல் மானியத் திட்டம் மன்னார் மாவட்டத்தின் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ள பதினாறு (16) தென்னஞ்செய்கை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் மன்னார் மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், மன்னார் மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபை இணைப்பாளர், ஆட்காட்டிவெளி விவசாய போதனாசிரியர், மன்னார் கிராம அபிவிருத்தி வங்கிக் கிளையின் மேலாளர் ஆகியோர் தென்னங்கன்றுகளை வழங்கி நிகழ்வைச் சிறப்பித்துள்ளதுடன் இதில் அரை ஏக்கர் தொடக்கம் ஒரு ஏக்கர் வரை உள்ள மேட்டுக் காணியுடையோர் நன்மையடையலாம் எனப் பொருண்மியச் செய்தி குறிப்பிடுகின்றது. (05)

# - திருமலைச் சிறையிலிருந்து - நால்வர் தப்பியோடியது தொடர்பாக இரு சிறைக் காவலர் கைது

(திருமலை)
திருகோணமலை சிறைச்சாலையில் இருந்து நான்கு விடுதலைப்புலிகள் சந்தேக நபர்கள் தப்பிச் சென்றமை தொடர்பாக சிறைச்சாலை உத்தியோகத்தர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் பற்றி விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட விசேட பொலிஸ் குழு சந்தேகத்தின் பேரில் அவர்களைக் கைது செய்துள்ளது.
கைதிகள் தப்பிச் செல்லக் கூடியதாக சிறைக் கூட்டின் பூட்டுக்களைத் திறந்து வைத்திருந்ததை சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளதாக சிரோஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.
விடுதலைப்புலிகள் எனும் சந்தேகத்தின் பேரில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பேர் கடந்த 11 ஆம் திகதி சிறையில் இருந்து தப்பிச் சென்றமை தெரிந்ததே.

# புத்திர சிகாமணிக்கு பொ.ஐ.மு. விளக்கம் கோரி கடிதம்

(கொழும்பு)
பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப் பட்டபாராளுமன்ற உறுப்பினர் புத்திர சிகாமணி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியது குறித்து விளக்கம் கோரப்பட்டுள்ளது.
இரண்டு வாரங்களுக்குள் இவர் பதில் தராவிட்டால் கட்சி யிலிருந்து விலக்கப்படுவார் என்றும் பொ.ஜ. முன்னணி யின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது. (32)

# சைவ நெறித் திறனாய்வு பரிசளிப்பு விழா 2003

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தினரின் சைவ நெறித் திறனாய்வு பரிசளிப்பு விழா 2003 கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
நாளை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் 2003 சைவ நெறித்திறனாய்வுப் போட்டி பரீட்சையில் சிறப்புப் புள்ளிகள் பெற்ற தரம் 11 மாணவர்களுக்கு பதக்கம்,சான்றிதழ் வழங்கப்பெறவுள்ளதுடன் பஞ்சபுராணம் ஓதும் போட்டியில் தகுதிபெற்ற மாணவர்களுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப் பெறவுள்ளது.
பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்து இந் நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் திருநெறிக்கழகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# தற்போதைய அதிகாரப் போட்டிக்கு பொதுத் தேர்தல் நடத்துவதே வழி

## -பா.உறுப்பினர் ஹிஸ்புல்லா

தற்பொழுது சனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியில் வெற்றி பெறுவதற்கு ஒரே மார்க்கம் பொதுத் தேர்தலாகும் எனப் பொதுசன ஐக்கியமுன்னணி அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.சில வேளை தேர்தல் ஒன்று நடந்தால் முஸ்லிம்கள் முகம் கொடுக்கும் அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக இரு கட்சிகளுடன் கலந்தாலோசித்த பின்பே திட்டங்களின்படி எந்தக் கட்சியில் சேர்ந்து தேர்தலில் போட்டியிடவேண்டும் எனத் தீர்மானம் எடுக்க உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள்:-
1.கல்வித்தகைமை:- க.பொ.த.(சாதாரணம்) கற்றிருத்தல்
2.அகவை:- 23தொடக்கம் 35 வரை.
3.உயரம் :- 05அடி 05 அங்குலம்.

குறிப்பு:- 01.விண்ணப்ப முடிவு நாள் :- 30.11.2003
02.அடிப்படை மாத சம்பளம்:- 3600 - 4700 +2000
=5600.00
10x110
03.விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத்தேர்வு :-
06.12.2003,07.12.2003ஆகிய நாட்கள் பாண்டியன் வாணிபம் கரடிப்போக்கு கிளிநொச்சி பணிமனையில் நடைபெறும்.
04.நேர்முகத்தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித் தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05.விண்ணப்பப் படிவங்களை புதுக்குடியிருப்பு, மல்லாவி,கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8903)


## அந்தியேட்டிக் கிரியையும், சபிண்டீகரண அழைப்பிதழும், நன்றிநவிலலும்

அன்னையின் மடியில் 08 - 07 - 1920



ஆண்டவன் அழைப்பில் 17 - 10 - 2003

கடந்த 17.10.2003 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி எய்திய எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் சரவணை - செல்லத்துரை

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கல்விளான் குளத்தில் முன்னர் வசித்தவரும், நாவலர்வீதி முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர் இறைவனடி எய்திய செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், தொலைநகல் மூலமும் எமக்கு ஆறுதலளித்து, இறுதிக் கிரியைகளில் கலந்து உதவிய உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவிப்ப துடன்,அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் சுபானு வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் (15.11.2003) சனிக்கிழமை அன்று முல்லைக்கடலில் நடைபெற்று, சபிண்டிகரணம் ஐப்பசிமாதம் 30ஆம் நாள் (16.11.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் முள்ளியவளை இல்லத்தில் நடைபெறும், அத்தருணம்தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்
மகன்மார்
செ.இராமலிங்கம்[இ.போ.ச.மன்னார்],
செ.குணராசா[இ.போ.ச.வவுனியா],
செ.சபாநாதன் [வி.ரீ.எஸ்.மனி சேவிஸ் வவுனியா],
செ.தங்கராசா [பவர்ரெய்ன்].

நாவலர்வீதி,
முள்ளியவளை.

(சி-8715)


ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி

ஆரவி மோட்டார் சென்ரர்

## ஆரவி மோட்டார் சென்ரர்

வவுனியா வாழ் மக்களுக்கோர் நற்செய்தி!

15.11.2003 இன்று நண்பகல் 12.22 மணி

சுபமுகூர்த்த வேளையில் உதயமாகிறது.

ஆரவி மோட்டார் சென்ரர்

இல.74, பஜார் வீதி,
வவுனியா.



(3872)

ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி ஆரவி



### சிந்தனைக்கு

எமது மொழியில், எமது கலைகளில் எமது பண்பாட்டில், எமது மண்ணில் நாம் கொள்ளும் பாசமும், நேசமும் தேசியப் பற்றுணர்வாகப் பரிணாமம் பெறுகின்றன.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-11-2003

# உத்தரவாதம் அவசியம்

"யுத்த நிறுத்த உடன்பாட்டின் உறுதிப்பாட்டை நோர்வே அரசுவழங்க வேண்டும்" என்ற தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் கோரிக்கையானது மிகவும் அர்த்தமுள்ளது. இன்றைய நிலையில் மிகவும் அவசியமானதும் கூட. ஏனெனில் சிறிலங்கா அரசியலில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினை மட்டுமல்ல, யுத்த நிறுத்த உடன்பாட்டையும், அதன் அடிப்படையிலான சமாதானப் பேச்சு வார்த்தைகளின் ஸ்திரத்தன்மையும் கூடக் கேள்விக்குறியாகி யுள்ளது.

இந்நிலையில் நோர்வேத் தரப்பு யுத்தநிறுத்த உடன்பாட்டின் உறுதிப்பாட்டை வழங்கவேண்டும் என தேசியத்தலைவர் பிரபாகரன் கோரியிருப்பதானது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளர்கள் யுத்த நிறுத்த கண் காணிப்பாளர்கள், கண்காணிப்புக் குழுவின் தலைமையைப் பெற்றி ருப்பவர்கள் என்ற ரீதியில் நோர்வே அரசிற்கு இக்கடப்பாடு உண்டு.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பு யுத்த நிறுத்தம் தொடரும், புரிந்துணர்வு உடன்பாடு கைவிடப் படவில்லை எனக் கூறிக் கொண்டாலும்; இவ் உடன்பாட்டை சந்திரிகா குமாரதுங்க மதித்து நடப்பார் என்பதற்கு எந்தவொரு உத்தரவாத மும் இல்லை.

ஒரு புறத்தில் சனாதிபதி சந்திரிகா இவ்யுத்த நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திடவில்லை. ஆகையினால் இவ் உடன்பாட்டிற்கு தான் பொறுப்பேற்கவேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்று அவரால் இலகுவாகவே கூறிவிடுதல் முடியும். அடுத்ததாக இவ்உடன்பாட்டிற்கு எதிரான கருத்துக்களையும் நிலைப்பாட்டையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியுமுள்ளார். அதுமட்டுமல்ல சனாதிபதி சந்திரிகா தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் எனக் கூறியே பாதுகாப்பு அமைச்சை ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து பொறுப்பேற்றுள்ளார். ஆகையினால், அவரது பார்வையில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு உட்படசெயற்படுகின்றமை தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்த லாகும். ஆகையினால், யுத்த நிறுத்தத்தை பொருட்படுத்தாது தேசிய பாதுகாப்பு என்ற ரீதியில் யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெறக்கூடும். இவை ஒரு புறம் இருக்க, யுத்தநிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் நடவடிக்கைகளையும் சனாதிபதியின் நடவடிக்கைகள் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. குறிப்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை வெளியேறுமாறு கோரியதனை சுட்டிக்காட்ட முடியும். இதன்மூலம் கண்காணிப்புக் குழுவின் நிகழ்காலப் பணிகள், எத்தகையதாக உள்ளது என்பது சர்ச்சைக்குரியதொன்றாகியுள்ளது.

அது மட்டுமல்ல முப்படைகளின் தளபதிகள் கண்காணிப்புக் குழுவின் அறிவுறுத்தல்கள் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு செயற்படவேண்டியஅவசியம் இல்லை என்ற சனாதிபதி சந்திரிகா வின் பணிப்பானது - ஆயுதப்படைகளின் தளபதிகளுக்கு யுத்தநிறுத்த உடன்பாட்டை மதித்து நடக்க வேண்டிய தேவை இல்லை என்பதற்கான அனுமதியாகவே கொள்ளத்தக்கதாகும். கண்காணிப்புக் குழு இதுவரையிலும் சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பை வழி நடத்த முற்படவில்லை என்பது நடைமுறையில் இருப்பினும் சனாதிபதியின் உத்தரவானது கண்காணிப்புக் குழுவுடன் இசைவான போக்கை கைக்கொள்ள வேண்டிய தேவை ஆயுதப்படைத்தளபதிகளுக்கு தேவை இல்லை என்பதற்கான அனுமதியாகவே கொள்ளத்தக்கதாகும்.

இத்தகைய நிலையில் அதாவது, யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு சனாதிபதி பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லாத நிலையிலும் அதனை சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்பதற்கான செயற்பாடுகள் காணப்படாத நிலையிலும், யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து விடுதலைப் புலிகள் நோர்வே அரசிடம் விளக்கம் ஒன்றை கோருவதோ அன்றி யுத்த நிறுத்த விதிமுறைகளை உறுதிசெய்ய வேண்டும் எனக் கோருவதோ மிக மிக அவசியமானதாகும்.

ஏனெனில் இது தமிழ் மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய விடயமாகும். எடுத்துக்காட்டாக புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் அரசியற் பணியில் ஈடுபட வழிவகை உண்டு. இந்நிலையில் யுத்த நிறுத்த உடன்பாடு வலுவிழந்ததாக இருக்குமானால் நிராயுத பாணிகளாக அரசியற் பணியில் ஈடுபடுவோரின் பாதுகாப்பு என்பது கேள்விக்குரியதொன் றாகிவிடும்.

ஆகையினால் யுத்த நிறுத்தத்தின் உறுதிப்பாடு குறித்து நோர்வே அரசு விடுதலைப் புலிகளுக்கு உறுதியளிக்க வேண்டிய கடப்பாடு என்பது அதற்கு உண்டு. சிறிலங்கா அரசை அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா மீது நம்பிக்கை வைத்து நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போன்றதாகும். ஏனெனில் அவர் நேரம் ஒன்று பேசுபவர். நேரத்திற்கு நேரம் நிலைப்பாட்டையும் மாற்றிக் கொள்ளக் கூடியவர். அதற்கு அவர் நோர்வே அரசுடன் யுத்த நிறுத்த காலத்தில் நடந்து கொண்டுள்ள முறையே எடுத்துக்காட்டாக கூடியது. அதாவது நேரத்திற்கு ஏற்ற வகையில் அரவணைப்பதும், உதறுவதும் அவரின் வழமையான பாணி.

# தேசிய அரசின் நிகழ்ச்சித் திட்டத்தை பொறுத்தே அதனை ஆதரிக்க முடியும்!

## முஸ். காங்கிரஸ் கட்சித் தலைவர் ஹக்கீம்

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்று அமைவதற்கு முன்னர் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்அரசியல்கட்சிகள் அதற்கான உடன்பாட்டை தெரிவிப்பதற்கு முன்னர் எப்படியான ஒரு நிகழ்ச்சித் திட்டத்துடன் இந்தத் தேசிய அரசாங்கம் செயற்படும் என்பது பற்றி ஒரு தெளிவு வேண்டும். சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டமாக இருந்தால் அதற்குப் பூரண ஆதரவை நாங்கள் தெரிவிக்கலாம். அதேநேரம் இந்த நாட்டின் தேர்தல் முறையில் கைவைக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள தென்னிலங்கை அரசியல் நெருக்கடி பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தம்முடைய கூட்டணிக்கட்சித்தலைவர்களுடன் நேற்று முன்தினம் விவாதம ஒன்றை நடத்தினார். இதில் கலந்து கொண்டு ரவூப் ஹக்கீம் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சமாதானத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டமாக இருந்தால் அதற்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கலாம்.

எனவே, பிரதான இரண்டு கட்சிகளும் சேர்ந்து சிங்கள பேரினவாதத்தின் அடிப்படையிலான நடவடிக்கைகளின் மூலம் சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தைப் மலினப் படுத்தும் முயற்சிகளிலும் இறங்கி விடக் கூடாது என்பதில் நாங்கள் சவனமாக இருக்க வேண்டும் என்றார்.

பிரதமரும், சனாதிபதியும் இரு வேறுபட்ட கொள்கைகளில் இருந்து கொண்டு தேசிய நல்லிணக்கம் பற்றிப் பேசுகிறார்கள் என நான் நினைக்கிறேன் எனத் தெரிவித்த ஹக்கீம், எனவே இதில் இருந்து அவர்கள் விடுபட்டு ஒருமித்த கொள்கையின் அடிப் படையில் இதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். இதில் துல்லிய மாக தெரிகின்ற ஒரேயொரு விடயம் இவர்களுக்கிடையிலே பரஸ்பரம் நிறைய நம்பிக்கையீனம் இருக் கிறது. அவர்கள் இருவருமாகச் சேர்ந்து ஒரு தேசிய அரசின் மாலுமிகளாக முன்னோடிகளாக செயற் படுவார்கள் என்பதில் நிறைய சந்தேகங்கள் இப்போது இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இ.த.அதிகார சபையைக் கண்டித்து தலதா மாளிகை முன் சத்தியாக்கிரகம்

## - பௌத்தபிக்குகளின் உயர் பீடமும் அமைப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இ.த.அதிகாரசபை வரைவைக்கண்டித்து தேசிய பிக்குமார் சங்கத்தைச்சேர்ந்த பிக்குகள் நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகையின் முன் னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தியுள்ளனர். இந்தப்போராட்டத்தைத் தொடர்ந்து பௌத்த பிக்குமாரின் அதியுயர் பீடம் அமைக்கப்பட்டுள் ளது.

இலங்கையில் பதவிக்கு வரும் அரசாங்கங்களுக்கு ஆலோசனை மற்றும் ஏனைய உபதேசங்களை வழங்கும் வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

அஸ்கிரியவோ மல்வத்த பீடங்களோ நாட்டின் இன்றைய சூழலுக்கேற்ப தீர்மானங்களை எடுப்பதாகத் தெரியவில்லை. மதத்தினால் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக் கிறது. எனவே இந்தக் குறைகளைத் தீர்த்து அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த அதியுயர் பீடம் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சனாதிபதியுடனான சந்திப்பில் ஐ.தே.க. தோழமைக் கட்சிகளுடனேயே ஈடுபடும்

(கொழும்பு)

சனாதிபதியுடனான கலந்துரையாடலில் இனிமேல் ஐ.தே.க. முன்னணியே கலந்து கொள்ளும். ஐ.தே.கட்சி தனித்துக் கலந்து கொள் ளாது என அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் அமைச்சரவையின் முடிவுகளை அறிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். ஐதே கட்சி சார்பில் பிரதமர் ரணில், முஸ்லிம் சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இ.தொ.காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ம.ம.முன்னணி சார்பில் அமைச்சர் சந்திரசேகரம் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களான கரு ஜெய சூரியா டிரோன் பெர்னாண்டோ ஆகியோர் அடுத்த வாரம் நடைபெறவுள்ள சனாதிபதியுடனான கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதே வேளை நேற்று முன்தினம் ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்நிலையில் சனாதிபதி சந்திரிக்காவும் பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களை நேற்று தனித் தனியாக சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதில் பிரதமருடன் தான் நடத்திய பேச்சுவார்த்தை பற்றியும் பொ.ஐ.முன்னணியின் எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது சனாதிபதியுடன் பிரதமர் நடத்திய பேச்சு வார்த்தை பற்றியும் அடுத்தவாரம் சனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்கு முன் ஐ.தே.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்கள் கூடிப் பேசுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

# வடக்கு கிழக்கு மாகாண ஆளுநரின் பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜெயவர்த்தனாவின் பதவிக்காலம் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த அவரது பதவிக் காலத்தை சனாபதிபதி நீடித்துள்ளார். நேற்று முன்தினம் அவர் சனாதிபதியிடம் பதவிப் பிரமாணத்தையும் எடுத்துக் கொண்டார்.

# பாகிஸ்தான் வீரர் அக்தாரிடம் விளக்கம் கேட்கிறது கிரிக்கெட்சபை

பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சொஹைப் அக்தார் அளித்த பேட்டியொன்று தொடர்பாக அவரிடம் பாக். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விளக்கம் கோரியுள்ளது.

ஐ.சி.சி.யினால் தமக்கு தடைவிதிக்கப்பட்டதை அக்தார் குறை கூறியுள்ளார். அதேவேளை தாம் நினைத்தால் எப்போதும் தலைவராகிவிட முடியும் எனவும் அக்தார் இந்திய பத்திரிகை ஒன்றுக்கு அண்மையில்அளித்த பேட்டியில் கூறினார் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யின் பிரதமர் நிறைவேற்று அதிகாரி ரமீஸ்ராஜா கூறுகையில்,

ஐ.சி.சி.யினால் அவருக்கு விதிக்கப்பட்ட தடையை விமர்சித்தமை எம்மைப் பாதித்த முதலாவது விடயமாகும் அத்துடன் "நான் நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் பா.அணித் தலைவராகி விடலாம். ஆனால் அதற்கு நான் முயற்சிக்கவில்லை" என்று அக்தார் கூறியுள்ளார். இது தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு பாக்கிரிக் கெட் கட்டுப்பாட்டுச்சபை அக்தாருக்கு உத்தரவிட்டுள்ளது. என்றார்.

28 வயதான அக்தார்அடிக்கடி சர்ச்சையில் சிக்கிக் கொள்பவராக விளங்குகிறார்.

### முக்கிய போட்டி

இந்தியாவில் நடைபெற்றுவரும் முக்கோண ஒருநாள் சர்வதேச கிரிக் கெட் தொடரின் முக்கிய போட்டி யில் இன்று இந்தியாவும் நியூசிலாந் தும் மோதவுள்ளன.

ஹைதராபாத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில் வெற்றிபெறும் அணியே இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும். இப் போட்டித்தொடரில் அவுஸ்திரேலிய அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக் கது.



# சனாதிபதி பொறுப்பேற்ற அமைச்சுக்களின் நிதிகளை எம்மால் கட்டுப்படுத்த முடியும்

## அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க

(கொழும்பு)

அரசாங்கமும் எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்கலாம் என்று சனாதிபதி எடுத்த பிழையான முடிவு இன்னமும் அவருக்குப் புரியவில்லை என அமைச்சர் எஸ். பி. திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களின் நிதிகளையும் நாடாளுமன்றத்தால் கட்டுப்படுத்தி அவ் அமைச்சுக்களை இயங்கவிடாது கட்டுப்படுத்த முடியும். ஆனாலும் அந்த அளவுக்கு நாங்கள் இன்னும் செல்லவில்லை என்றார்.

இது தொடர்பாக அடுத்த வாரம் சனாதிபதியுடனான சந்திப்பின்போது உறுதியான தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர் இவை சரிவராதுபோனால் பொதுத் தேர்தல் ஒன்றை சந்திப்பதற்குத் தாங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# சனாதிபதி-அரசாங்கம் அதிகாரப்போட்டி சமாதான முயற்சிகளுக்கு ஆபத்து

## - தேசிய சமாதான சபை எச்சரிக்கை

சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையே தற்போது நிலவிவரும் அதிகாரப் போட்டி சமாதான நடவடிக்கைகளைத் திட்டவட்டமாக ஆபத்துக்குள் தள்ளியுள்ளது என தேசிய சமாதான சபை நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது. நோர்வே அனுசரணையாளர்கள் சமாதான முயற்சிகளிலிருந்து விலகியிருக்கும் தமது முடிவை மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனவும் சமாதான சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசாங்கத்திற்கும் சனாதிபதிக்குமிடையில் எழுந்துள்ள அதிகாரப்போட்டி திட்டவட்டமாக சமாதான முயற்சிகளை ஆபத்திற் குள்ளாக்கியுள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இரு கட்சிகளும் உடனடியாக இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பது என்ற மக்களின் கோரிக்கையை அனைத்துக்கட்சிகளும் மதிக்க வேண்டும் எனவும் அது கேட்டுள்ளது.

# ஐப். மருத்துவ உதவியமைப்பின் மருத்துவ அறிமுகச் சொற்பொழிவு

ஜப்பானிய நாட்டு மருத்துவ உதவி அமைப்பான 'லங்கா சிகேப் குயூ.சிகுயோ' நிதியத்தின் ஏற்பாட்டில் மருத்துவ அறிமுக சொற்பொழிவுகள் நாளை யாழ்குடாநாட்டில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரான்லி வீதியில் உள்ள ஆயுள்வேத கல்லூரி மண்டபத்தில் நாளை காலை பத்து மணிக்கும், நான்கு மணிக்கு கரவெட்டி சிறிபரமானந்தா ஆச்சிரமத்திலும் இவ்வறிமுக சொற்பொழிவு விழா இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளவென அவ்வமைப்பின் சிரேஷ்ட பிரமுகர்களான கிங்ஸ்லி காரியவாசம் மற்றும் கலூம் வீரசிங்க உள்ளிட்ட குழு ஒன்று குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளது. (27)

### சமாதான முயற்சி...

இருந்தால் யானையைக் கட்டுப் படுத்தும் 'அங்குசம்' சனாதிபதி சந்திரிகாவாக இருப்பதால் சமாதானத்தை நகர்த்திச் செல்லமுடியாதுள்ளது.

அத்துடன் சமாதானம் ஒரு தீர்க்கமான நிலைக்கு வந்த நிலையில் மூன்று அமைச்சுக்களையும் சனாதிபதி தன்வசம் எடுத்தது சமாதானத்தை குழப்பியடிக்கும் நிலைக்கு வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

தேசிய அரசை நாங்கள் எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்த பிரதமர் அதற்கு என்றைக்கும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும் இன்றையநிலையில் தங்களது கட்சி 129 ஆசனங்களுடன் மிகவும் பலமான நிலையில் இருக்கும் நிலையில் சனாதிபதி இவ்வாறான முடிவு எடுப்பது தவறானது எனத்தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடமாக போர் நிறுத்தத்தை தாங்கள் கடைப்பிடித்து வந்ததால் இலங்கையில் அரசியல் ஸ்திர நிலைமை இருந்தது. தற்போது அது முழுமையாய் இல்லாது போய்விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (32)

### சமாதான...

ஏற்படுத்தும் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லையென சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நோர்வே சமாதானத் தூதுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளார். நேற்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனையும் சிறிலங்காவுக்கான நோர்வே தூதுவர் கான்ஸ்பிரஸ்காரையும் சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளாக முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான முயற்சிக்கு பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தலைமை தாங்க வேண்டுமென்றும் சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். பிரச்சினைகள் ஏதும் ஏற்படின் அது குறித்து பிரதமர் தன்னுடன் கலந்தாலோசிக்கலாமென்றும் அவர் குறிப்பிட்டார். நாட்டின் சகல கட்சிகளின் இணக்கத்துடன் ஏற்படும் சமாதானத் திட்டத்திற்குத் தான் கையெழுத்திட தயங்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார். (32)

### அனுசரணையா...

டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் போராளிகள் சுதந்திரமாக நடமாடுவதற்குப் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கவேண்டும் எனக் கேட்டிருந்தனர்.

இது தொடர்பில் அரசதரப்புடன் உரையாடிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவ் உத்தரவாதத்தை தற்போதைய நிலையில் வழங்க முடியாது எனத் தெரிவித்தார் எனத் தெரிவித்த ஹெல்கேசன், சனாதிபதி இதற்கான முழு ஒத்துழைப்பையும் உறுதியையும் வழங்குவதாகத் தெரிவித்ததாகவும் தெரிவித்தார். இதேவேளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் உள்ள நோட்டிக் நாடுகளின் உறுப்பினர்களின் பாதுகாப்பு முக்கியமானது எனத் தெரிவித்த ஹெல்கேசன் அதனை நோர்வே விசேட கவனத்துடன் தனிப்பட்ட முறையில் உன்னிப்பாகக் கவனத்தில் கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நிலையில்லா அரசாங்கத்தினால் தங்களது உறுப்பினர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு அச்சுறுத்தலும் வந்துவிடக்கூடாது என்பதில் நோர்வே மிகவும் உன்னிப்பான கரிசனையுடன் இருப்பதாகவும் கூறினார்.

கடந்த வாரம் சனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுக்கொண்டதால் ஏற்பட்ட நிலைமை சர்வதேச ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு மோசமானநிலை என நாங்கள் கருதுகின்றோம்.

சமாதான நடவடிக்கை மிக விரைவில் முடியக் கூடியது அல்ல. ஆனால் அது உடைக்கப்படலாம். அரசியல் நெருக்கடி தொடர்ந்தால் பெருமளவு மக்களின் ஆதரவைப் பெற்றுள்ள சமாதான நடவடிக்கைகள் மேலும் நெருக்கடிக்குள்ளாகலாம். இந்த அரசியல் நெருக்கடி தொடருமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்துவது சாத்தியமற்றது.

போர்நிறுத்தம் உடைவதற்கான சாத்தியங்கள் அதிகம். அரசியல் நிலைமைகளில் தெளிவான ஒரு நிலைமை ஏற்படுமாக இருந்தால் சமாதானப் பேச்சுக்களை நாளை கூடத் தொடங்கலாம். கடந்த வாரத்துக்கு முன்னர் ஒரு தெளிவான நிலைமை இருந்தது. இப்பொழுது அது இல்லாது இருப்பதாக விதார் ஹெல்கேசன் தெரிவித்தார்.

உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் போர்நிறுத்த உடன்பாடு வெற்றியளித்திருப்பதாகத் தெரிவித்த ஹெல்கேசன் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாட்டுக்குத் தங்களால் எந்த விதமான மத்தியஸ்தமும் வகிக்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடியை இலங்கை மக்களும் அரசியல் வாதிகளும் தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். தாங்கள் தொடர்ந்தும் மத்தியஸ்தம் வகிப்பதாக இருந்தால் இலங்கையில் நிலையான அரசியல் சக்தி ஒன்று உருவாக வேண்டும், அத்துடன் ஒரு உறுதியான வேலைத்திட்டதினூடான செயற்பாடு இருக்குமாக இருந்தால் மீண்டும் சமாதானப் பேச்சுக்கு அனுசரணையாளராகச் செயற்பட முடியும் எனவும் ஹெல்கேசன் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினரின் பாதுகாப்புத் தொடர்பாக ஹெல்கேசன், தெரிவிக்கும் போது விடுதலைப் புலிகள் தற்காலிகமாக எடுத்த முடிவல்ல அது. தூரநோக்கு சிந்தனையுடன் கேட்ட ஓர் உத்தரவாதம் அது. அதில் எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமில்லை எனத் தெரிவித்தார். (32)

# அரசியல் சூழ்நிலை மாற்றம் மீள் குடியேற்றத்தைப் பாதிக்கும்

## யு.என்.எச். சி.ஆர் கவலை

தற்போதைய அரசியற் சூழ்நிலை உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்படவிருக்கும் இலங்கை அகதிகள் ஆகியோர் வைத்திருக்கும் நம்பிக்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி றுன்ரைட் கவலை தெரிவித்துள்ளார். குறிப்பாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் 4 லட்சம் பேர் மற்றும் இந்தியாவில் முகாம்களில் உள்ள சுமார் 61ஆயிரம் இலங்கை அகதிகள் ஆகியோர்கள் வருங்கால நிலைமை பற்றி அவர் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார். நாட்டின் தெளிவற்ற அரசியல் நிலைமை காரணமாக உதவி வழங்கும் நாடுகளின் நம்பிக்கை இழக்கப்படும் பட்சத்தில் மீள் குடியேற்றத்திட்டங்கள் பாதிக்கப்படலாம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் பிரதிநிதி புனர்வாழ்வு மீள் குடியேற்றம் அகதிகளுக்கான அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவை கொழும்பில் நேற்றுச் சந்தித்து உரையாடிய போது இவ்வாறு தெரிவித்தார்.

# ஐ. ரி. என். பணிப்பாளர் சபை மாற்றத்திற்குள்ளாகவில்லை!

## – திறைசேரிச் செயலாளர்

(கொழும்பு)

ஐ.ரி.என்.சுயாதீனத் தொலைக் காட்சியின் பணிப்பாளர் சபை எந்தவிதமான மாற்றங்களுக்கும் உள்ளாகவில்லை திறைசேரி செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பணிப்பாளர் சபைக்குத் தலைவராக இருந்த ஐ. தே.க. வைச் சேர்ந்த வீரசிங்கவே தொடர்ந்தும் பணிப்பாளராக இருப்பார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொமர்சல் வங்கியில் இதன் முழுக் கணக்குகளும் இருப்பதாகவும், அக்கணக்குகள் தொடர்ந்தும் இயங்கும் எனவும், எந்தவொரு வெளியாரும் சுயாதீனத் தொலைக் காட்சியின் கணக்குகளிலோ அல்லது பணிப்பாளர் சபையிலோ கேட்டுக் கொள்ள முடியாது என அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (32)

## - சீனாவிலிருந்து இலங்கையூடாக -

# ஐந்து சீனச் சிறுவர்களை கடத்த முயன்ற சீனர்கள் கைது

(கொழும்பு)

சீனாவில் இருந்து ஒஸ்ரியா வியன்னா நகருக்கு சிறுவர்களை கடத்த முற்பட்ட இரண்டு சீனர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து சீனச் சிறுவர்களை இலங்கையினூடாகக் கடத்த முற்பட்ட போது இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் நேற்று நீர்கொழும்பு நீதிமன்றில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் இருந்து இலங்கைக்கூடாக சிறுவர்களைக் கடத்தும் ஓர் வியாபாரம் தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (32)

### நாகர்கோவிலில்...

பஸ்தரே கைது செய்யப்பட்டவராவார்.

நாகர்கோவில் அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் அமைந்துள்ள 10ஆவது படையணி தளத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்தவேளை அங்கு நின்ற படையினரால் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கொடிகாமம் பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட குறித்த பொதுமகனை எதிர்வரும் 28ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க சாவகச்சேரி நீதவான் பா. சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் திகதியன்று குறித்த பொதுமகன் படையினரால் கைது செய்யப்பட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, குற்றச்சம்பவம் ஒன்று தொடர்பாக சந்தேக நபர் மீதான வழக்கு விசாரணையொன்று பருத்தித்துறை நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(27)

### ஒப்பந்தம்...

லுக்குப் போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெரும்பான்மை ஆசனங்களால் வெற்றி பெறும். தற்போது இருக்கும் அரசியல் நிலையில் சனாதிபதி சமாதா னத்தைக் குழப்பிவிட்டார் என்ற தன்மைதான் நிலவுகிறது. உடனடியாக தேர்தலுக்குப்போக வேண்டிய அவசியம் இல்லை. தாமதப்படுத்தித் தேர்தலுக்குப் போவது நல்லது எனத் தெரிவித்துள்ளார். (32)

# துயர் பகிர்வோம்

மல்லாவி வைத்தியசாலையில் பணிபுரியும் உதவி வைத்தியர் திருமதி ரேணுகா கஜேந்திரன் அவர்களின் அன்பு மாமியார் நாமகள் தேவி தெண்டாயுதபாணி அவர்கள் (வட்டு வடக்கு சித்தங்கேணி ) 05/11/2003 அன்று காலமானார். இவரின் மறைவையொட்டித் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் எமது துயரினைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

தகவல்: *வைத்தியசாலை அ/தி சபை*
*சேவையாளர் நலன்புரிச் சங்கம்*
*ஆரோக்கிய சித்தி விநாயகர் சபை*
*ஆலயபரிபாலனசபை.*
*மல்லாவி.*

(சி-2935)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.